1986 நவம்பர் 20]

கடந்த 1, 2 ஆண்டுகளில் அவர்களுடைய தரம் யாது என்றெல்லாம் கணக்கில் கொண்டு அவர்களுக்கு மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கொண்டு வரப்பட்டது. எனவே ரெவ்யூ முறை மாணவர்களுக்கு உகந்ததாக இருக்கும் என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட எண்ணமும் அச்ச உணர்வும் நீங்குவதற்கு இது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற ரெவ்யூ முறையைக் கையாளும்போது அடுத்த தேர்வு வருவதற்குள் மீண்டும் மதிப்பீடு சரி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தே ஆய்வு முறையை முடித்தால் தான் மேல் படிப்பிற்கு மாணவர்கள் போக முடியும் என்பதால் இது குறித்து தக்க நடவடிக்கையை அரசும் எடுக்கும், பல்கலைக் கழகங்களும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியில் இறந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு அளிக்கும் பணிச்சலுகையை தனியார் பள்ளிகளுக்கு நீட்டித்தல்.

*106—(*வினா எண் 8067)* **திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியில் இருக்கும் போது இறந்து விட்டால் அவரது வாரிசுகளில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிடும் திட்டத்தை தனியார் பள்ளிகளுக்கும் நீட்டிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியில் இருக்கும் போது இறந்து விட்டால் அவரது வாரிசுகளில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கும் திட்டம் 17-12-1983-ல் இருந்து தனியார் பள்ளி ஊழியர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் தனியார் பள்ளி ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் தனியார் பள்ளிகள் அவ்வாறு செயல்படவில்லை என்று அரசுக்குப் பல தகவல்கள் வந்து இருக்கின்றன. எனவே அதற்குரிய வகையில் நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் அரசினுடைய ஆணையை ஈடேற்றத் தவறினால் கட்டாயமாக அவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஏதாவது, எங்காவது தவறு நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40.)

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பல ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அரசு ஆசிரியர்களுக்குண்டான வசதி வாய்ப்புகள் அவர்களுக்குச் சரியான முறையில் தரப்படவில்லை என்றும், அரசு தருகின்ற சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அத்தகைய குறைபாடுகள் தனியார் பள்ளிகளில் இருக்கின்றன என்ற கருத்தையும் நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அந்தப் பகுதியின் பெற்றோர் என்ற முறையிலும் நான் அரசுக்குத் தெரிவித்திருந்தேன். அதன் பேரில் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறதா அல்லது அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதை தற்போது ஒரு மனுவாகக் கொடுக்கும்படி வேண்டுகிறேன். அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதாரண்யத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள்.

107—(*வினா எண் 9512) திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் தாலுகா தலைமையிடத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை, (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.